ஸ்ரீ ஹரி:

மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

# மதுரமுரளி

## தெய்வீக மாதப் பத்திரிகை

NO FAME
NO NAME
NO SELF INTEREST
ONLY GOD

மஹாமந்திரம்:

ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே

வேணு : 13 ஜூன் 2008 கானம் : 11

Published by
V. Sankaran
on behalf of
Guruji Sri Muralidhara
Swamigal Mission,
Chennai - 83.

*Copyright of articles published in **'MADHURAMURALI'** is reserved. No part of this Magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writting from the publisher of Madhuramurali.*

**உதயாஸ்தமன ஸ்ரீமத் பாகவத சப்தாஹம்**

இடம் : அயோத்யா அஸ்வமேத மஹாமண்டபம், மேற்கு மாம்பலம், சென்னை - 600 033.

தேதி : 15-6-2008 முதல் 21-6-2008 வரை

### இந்த இதழில்...

குருநாதன் தாள் பணிவாய் ... 2

ஆலங்குடி பெரியவர்களின் அதிஷ்டானம் ... 3

முதலை அவரை விட்டுச் சென்றுவிட்டது

ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களிடம் கேள்வி... 5

மீரா வாழ்நாள் முழுவதும் ஸ்ரீமத் பாகவதம்

அன்பகம் என்னும் ஒரு அருளகம் ... 7

சர்வ ஜீவராசிகளிடமும் தயை செலுத்துவதால்தான்

பிரியமே விரதமாக உடைய பிரியவிரதன் ... 11

உலகத்தில் நல்லதோ கெட்டதோ

ஸ்ரீ ஸ்வாமிஜியுடன் சென்று வந்தீர்களா ... 13

மனவலிமை என்னும் மாபெரும் சக்தி ... 22

சாதாரண விவசாயி குடும்பத்தில்

**ஒரு முறை பாகவத சப்தாஹம் அதிலும் உதயாஸ்தமன சப்தாஹம் கேட்பதற்கும் படிப்பதற்கும் வாழ்க்கையில் பெரும் பாக்கியம் செய்திருக்க வேண்டும்.**

ஸ்ரீ ஹரி :

# ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் கீர்த்தனம்

*2006-ஆம் வருடம் செப்டம்பர் மாதம், மதுரபுரியில் நடைபெற்ற நவராத்திரி உத்சவத்தில் ஒரு நாள் மாலை, ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள், மாதுரீஸகீ. பிரேமிகவரத யுகளத்தை ஊஞ்ஜலில் எழுந்தருளச் செய்து பஜனையை ஆரம்பித்தார்கள். முதலில், குரு கீர்த்தனம் பாட வேண்டும் அல்லவா! அதற்காக, 'காஷாய தண்ட கரகாதி....' என்ற பகவன்னாம ஸ்ரீ போதேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் பற்றிய சுலோகத்தை பாடச் சொன்னார்கள். அப்பொழுது ஸ்ரீ போதேந்திராள் மீது அற்புதமாக 'குருநாதன் தாள் பணிவாய்' என்ற இந்த கீர்த்தனத்தை கவனம் செய்தார்கள். ஸ்ரீ போதேந்திராளை 'கற்பக தரு'வாக வர்ணித்து 'அவரே நமக்கு கதி' எனப் பாடினார்கள்.*

*ராகம் : சிம்மேந்திரமத்யமம்* — *தாளம்: ஆதி*

*பல்லவி*

*குருநாதன் தாள் பணிவாய் - கற்பகத்*
*தருவென விளங்கும் - ஸ்ரீ போதேந்த்ர* *(குருநாதன்)*

*அனுபல்லவி*

*சீர் கெட்ட கலியில் நீ கெட வேண்டாம்*
*திவ்ய நாம ஸித்தாந்தம் செய்த - நம்* *(குருநாதன்)*

*சரணம்*

*யோகம் வேண்டாம் யாகம் வேண்டாம்*
*தத்துவ வாதமும் செய்திட வேண்டாம்*
*மந்திர தந்திர யந்திரம் வேண்டாம்*
*சிந்திக்க வேண்டாம் வேறு உபாயம் தனை* *(குருநாதன்)*

*நாமாவளி*

*சத்குரோ பாஹிமாம் பரமதயாளோ ரக்ஷமாம்* *(சத்குரோ)*

## மதுரமான 148 ஞானியர்

முடிகொண்டான் என்றொரு கிராமம், மாயவரம் பக்கத்தில் உள்ளது. இங்கு ஒரு ஸ்வாமிகளின் அதிஷ்டானம் உள்ளது. அவருடைய ஜென்ம பூமி ஆலங்குடி என்பதால் அவரை எல்லோரும் ஆலங்குடி பெரியவாள் என்றே அழைப்பார்கள். 1935, மே மாதம், 17–ஆம் தேதி அன்று, அவர்கள் சித்தியானார்கள். ஸ்ரீமத் பாகவத பாராயணம், பிரவசனம் என்பதையே தன்னுடைய உயிர்மூச்சாகக்கொண்டிருந்தார்கள். அவருக்கு இஷ்ட தெய்வம், ஸ்ரீ நரஸிம்ம மூர்த்தி. ஸ்வாமிகள் சித்தியான தினம் வைகாசி சுவாதியான ஸ்ரீ நரஸிம்ம ஜயந்தி. ஸ்ரீமத் பாகவதத்தில் உள்ள பிரஹ்லாத ஸ்துதியைப் பாராயணம் செய்துகொண்டே சித்தியானார்கள். ஒரு உண்மையான துறவி எப்படி இருக்க வேண்டுமோ அப்படி வாழ்ந்தவர்கள் ஸ்வாமிகள்.

ஒரு சமயம், அவர் நதியில் நீராடிக்கொண்டிருக்கும்பொழுது, ஒரு முதலை வந்து அவருடைய காலைப் பிடித்தது. அப்பொழுது, அவர் 'ஹரி' 'ஹரி' என்று உரக்கக் கூவ, அந்த முதலை அவரை விட்டுச் சென்றுவிட்டது. இதைப் பார்த்த எல்லோரும் வியப்படைந்தார்கள். பிறிதொரு சமயம், அவருடைய காலில் ஏற்பட்ட காயம் ஆறுவதற்காக பழுக்கக்காய்ச்சிய எண்ணை ஊற்றிக்கொண்டார் ஸ்வாமிகள்.

ஒரு சமயம், அவர் ஸ்ரீமத் பாகவத கதை சொல்லிக் கொண்டிருக்கும்பொழுது ஒரு பாம்பு வந்தது. அந்தப் பாம்பு, அவர் அமர்ந்திருக்கும் பலகையில் அடியில் போய் படுத்துக் கொண்டதாம். அப்பொழுதும் அவர் எந்த சலனமுமின்றி பிரவசனம் செய்து முடித்தார்கள்.

ஆலங்குடி பெரியவாளின் ஆராதனையை ஒட்டி ஒவ்வொரு வருடமும் முடிகொண்டானில் ஸ்ரீமத் பாகவத மூல பாராயணமும் பிரவசனமும் நடக்கும். இந்த வருடம் நம்முடைய சத்சங்கத்து அன்பர்களின் மூல பாராயணமும், ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் பிரவசனமும் நடைபெற்றது.

முடிகொண்டானுக்கு, ஸ்வாமிகளின் அதிஷ்டானத்தை தரிசனம் செய்ய, இருபது வருடங்களுக்கு முன்பாக நம் ஸ்வாமிஜி சென்றிருந்தார்கள். அப்பொழுது, அந்த ஊரில் உள்ள ஒரு பக்தர், ஸ்ரீ ஸ்வாமிஜியிடம், ''ஒருமுறை தாங்கள் வந்து ஸ்ரீமத் பாகவத பாராயணமும், உபன்யாசமும் நடத்த வேண்டும்'' என்று பிரார்த்தித்தார்கள். அப்பொழுது ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள், ''காலம் கனிந்து வரும், அப்பொழுது அது கட்டாயம் நடக்கும்'', என்றார்கள்.

அந்த பக்தர் இந்த முறை ஸ்ரீ ஸ்வாமிஜியிடம், ''தாங்கள் இருபது வருடத்திற்கு முன்பாக சொன்னது இப்பொழுது அப்படியே நடந்துள்ளது'' என்று கூறி சந்தோஷப்பட்டார்கள். அவர் மட்டுமா? நாமும்தான்.

**(தொடரும்)**

**–டாக்டர் பாக்யநாதன் ஆதிமூர்த்தி**

## வேததமே தாய்

சாதாரணமாக, பள்ளிகளில் படிக்கும் சிறுவர்கள் அன்றாடம் வீடு திரும்பி, பெற்றோரின் அரவணைப்பில் வாழ்கின்றனர். இது மிக சரியே. விடுதிகளில் தங்கி படிக்கும் மாணவர்கள், தங்களது சொந்த இல்லங்களுக்கு அவ்வப் பொழுது சென்றுவிடுகின்றனர். தங்களது வீடு நினைவு வந்தவுடன், அனைவருக்கும் அங்கு செல்ல நினைவுக்கு வந்துவிடும். இதுவும் இயற்கைதான். ஆயின், வேதபாடசாலையில் தங்கி பயிலும் குழந்தைகளுக்கு அப்படி இடையிடையே செல்ல வேண்டுமெனும் எண்ணம் தோன்றுவதில்லை. இதில் ஆச்சரியமிருந்தாலும், ஒன்றை யோசித்துப் பார்த்தால், அது ஏன் என புரிகிறது. வேதத்தை நாம் 'வேதமாதா' என்கிறோம். மாதா என்றால் அன்னை என்றுதானே அர்த்தம். வேதம் கற்றுக் கொள்ளும் குழந்தைகளுக்கு வேதமே மாதாவாக இருந்து, அரவணைப்பு காட்டுகிறது. அதனால்தான் ஒருவரால், 15-20 வருடங்கள் வீட்டில் இருந்து பிரிந்து படிக்கவும் முடிகிறது. உலக படிப்புகளை எடுத்துக்கொண்டால், தொடர்ந்து 5 வருடங்கள் ஒருவர் படிப்பது கூட அதிசயம்தான்.

**–நெமிலிச்சேரியில் ஸ்ரீ ஸ்வாமிஜியின் உபன்யாசத்தில் கேட்டது**

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் பதில்கள்

*கேள்வி : பகவானை பக்தி செய்வதால் சகல துன்பங்களும் போய்விடுமா?*

ஸ்ரீ ஸ்வாமிஜி : பத்ராசலம் ஸ்ரீ ராமதாஸர், அண்ணமாச்சார்யர், திருநாவுக்கரசர், மீரா போன்ற எவ்வளவோ சரித்திரகால பக்தர்களும், பிரஹ்லாதன் போன்ற புராண கால பக்தர்களும் சொல்லொனாத துன்பப்பட்டுள்ளார்கள். பகவான் ஸ்ரீ ராமக்ருஷ்ணர், ஸ்ரீ ரமண மஹரிஷிகள், யோகி ராம்சுரத்குமார் போன்ற மஹான்களும் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு ஏன் கஷ்டம் வந்தது என்று பார்க்காமல், அவ்வாறு வந்த நிலையிலும் அவர்கள் எப்படி இருந்தார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். அவர்களை எதுவும் பாதிக்கவில்லை என்று சொல்லலாமா? அதுவும் நடக்கக்கூடியதுதான்.

மருத்துவமனையில் சிலருக்கு முதுகு தண்டுவடம் அல்லது கபாலத்தை உடைத்து மூளையில் அறுவை சிகிச்சை பல மணி நேரங்கள் நடைபெறும். அறுத்து, உடைத்து, கழற்றி, முடுக்கி என்று என்னன்னவோ செய்வார்கள். ஆனால், எதுவும் அவருக்குத் தெரியாது. மயக்கமருந்து என்னும் ஒரு ஊசி செய்யும் மாயமாம். ஒரு ஊசியே இப்படி செய்யுமானால், பகவானுடைய அருள் அப்படி செய்யாதா என்ன? நிச்சயமாகச் செய்யும்.

***கேள்வி : ஸ்ரீ ராமக்கிருஷ்ணர், எப்பொழுதும் ஆடிக்கொண்டும் பாடிக்கொண்டும் காளியையும், கிருஷ்ணனையும் பூஜை செய்து கொண்டுமிருந்தார். ஆனால், ஸ்வாமி விவேகானந்தரோ சமுக சேவையைத்தானே அதிகம் உபதேசித்துள்ளார்?***

பதில் : பகவான் ராமக்ருஷ்ணர், தான் பூஜை செய்யும் தெய்வத்தின் உள்ளே சகல ஜீவராசிகளையும் பார்த்து உபாசனை செய்தார். ஆனால், ஸ்வாமி விவேகானந்தரோ, சர்வ ஜீவராசிகளின் உள்ளே இறைவனைப் பார்த்தார். இதுதான் வித்தியாசம். இரண்டின் முடிவும் ஒன்றுதான்.

*கேள்வி : ஸ்ரீமத் பாகவதத்தை பெண்கள் பாராயணம் செய்யலாமா? சில பெரியவர்கள் பாராயணம் செய்யகூடாது என்று சொல்லியுள்ளார்களாமே!*

பதில் : ஸ்ம்ருதிகள் சில. ஒரு ஸ்ம்ருதி மறுக்கின்ற விஷயத்தை ஒரு ஸ்ம்ருதி அனுமதிக்கும். நாம் செய்கின்ற ஒரு காரியத்திற்கு ஒரு ஸ்ம்ருதியிலாவது பிரமாணம் இருந்தால் போதும். அதுபோல், இதை சில பெரியவர்கள் மறுத்திருக்கலாம். அனுமதித்த சில பெரியவர்களும் உள்ளார்கள். மீரா பரமபக்தை. பகவான் ஸ்ரீ கிருஷ்ணனுக்காகவே வாழ்ந்தவள். நூறு துறவிகளுக்குச் சமமானவாள். அந்த மீரா, வாழ்நாள் முழுவதும் ஸ்ரீமத் பாகவதமும், பகவத் கீதையும் படித்து வந்துள்ளது மீராவின் சரித்திரத்திலிருந்தும் கீர்த்தனைகளிலிருந்தும் தெரிய வருகின்றது.

*ஹரிகுண காவத நாசூங்கீ - மைம்*
*ப்ரபு குண காவத நாசூங்கீ*

*அப்னே மந்திர மே பைட் பைட்கர*
*கீதா பாகவத வாசூங்கீ (ஹரி)*

என்று பாடுகிறாள். இந்தப் பிரமாணமே நமக்குப் போதும்.

## சுகமாகப் பழகுவாய்

முதலில், உலகத்தில் நடப்பவைகளை எல்லாம் பகவானின் லீலை என்று சாக்ஷி மாத்திரமாக பார்த்துப் பழகு.

அடுத்ததாக, உன் வாழ்க்கையில் ஏற்படும் அனைத்து மாற்றங்களையும், தனித்திருந்து, பகவானுடைய லீலை என்று பார்த்துப் பழகு.

அடுத்ததாக, உன் உடலில் ஏற்படும் வியாதி, மூப்பு போன்றவைகளை, தனித்திருந்து, சாக்ஷி மாத்திரமாகப் பார்த்துப் பழகு.

அடுத்ததாக, மனதில் ஏற்படும் எண்ணங்களை தனித்திருந்து சாக்ஷி மாத்திரமாக பார்த்துப் பழகு.

அடுத்ததாக, தானே தானில் ரமித்திரு.

- ஸ்ரீ ஸ்வாமிஜி

# பாலகர்களுக்கு ஒரு கதை

- ஸ்ரீ ஸ்வாமிஜி

குழந்தைகளே! நான் சமீபமாக தஞ்சாவூர் சென்றிருந்தேன். அங்குள்ள ஸ்ரீ நவநீதகிருஷ்ணன் கோவிலில் மாலையில் கதை. அந்த சமயத்தில், ஒரு நாள் மாயவரம் சென்றிருந்தேன். அங்கு அன்பகம் என்ற இடத்திற்குச் சென்றிருந்தேன். ஞானசம்பந்தம் என்பவரும் அவருடைய மனைவியும் சேர்ந்து அதை நடத்தி வருகின்றார்கள்.

தான் பெற்ற குழந்தையே ஆனாலும், அந்தக் குழந்தை போதுமான மூளை வளர்ச்சி இல்லாமல் இருந்தாலோ, அல்லது வேறு ஏதாவது குறையுடன் இருந்தாலோ, சில பெற்றோர்கள் அந்தக் குழந்தையை வைத்துக்கொள்வதற்குப் பிரியப் படுவதில்லை. அப்படி இருக்க, இந்த தம்பதிகளோ, நூற்றுக்கும் மேற்பட்ட குழந்தைகளைத் தங்கள் குழந்தைகளாக நினைத்து வளர்க்கின்றார்கள். அதில், ஒரு குழந்தைக்கு, இடி, மின்னல், சப்தத்தைக் கேட்டாலே பயமாம். தலையைச் சுவற்றில், 'மடேல், மடேல்' என்று முட்டிக்கொள்வானாம். மற்றொரு குழந்தைக்கு அவன் செய்து வரும் வேலையை, வேறு ஒருவர் செய்தால் பிடிக்காதாம். கோபம் வந்து ஆவேசப்படுவானாம். சில குழந்தைகள் ஒரு சிறிய sofaவில் படுத்தவண்ணமாகவே உள்ளன.

பலருக்கு, தினமும் Physio Therapy கொடுக்க வேண்டும். சிலர், தனக்குத் தானே ஏதோ ஒரு உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அதிலும், ஒரு சிறு பெண் குழந்தை. அதற்கு இரண்டு கைகளும் இல்லை. மற்றபடி எல்லாவிதத்திலும் நார்மலாக உள்ளாள். முதல் முறை என்னைப் பார்த்துக்கொண்டே இருந்தாள். இரண்டாவது முறை, நான் அந்தக் குழந்தையைப் பார்க்கச் சென்று, 'உன் பெயர் என்ன?' என்று கேட்டேன். தலையைக் குனிந்து கொண்டாள். வெட்கமோ என்று நினைத்தேன். பிறகு தலையை நிமிர்த்திப் பார்த்தால் கண்களில் நீர் முத்துகட்டி இருந்தது. என் மனது சங்கடப்பட்டது. இனம் புரியாத வேதனை.

கர்மயோகம் பற்றிக் கேட்டுள்ளேன். பார்த்துள்ளேன். ஆனால், ஞானசம்பந்தம் தம்பதிகள் செய்யும் சேவையே உண்மையான கர்மயோகம். எவ்வளவு பிரச்சனைகள் வந்தாலும் முன் வைத்த காலை பின் வாங்காமல் அவர்கள் செய்துவரும் சேவை, மகேச்வர சேவையே.

ஸ்ரீமத் பாகவதத்தில், பிரஹ்லாதன், அசுரக் குழந்தைகளுக்கு உபதேசம் செய்யும்பொழுது, சர்வ ஜீவராசிகளிடமும் தயை செலுத்துவதால்தான் பகவான் சந்தோஷமடைகின்றான் என்கின்றான். தயையோடு கூடிய கீர்த்தனம் வேண்டும்.

நீங்களும் உங்கள் பிறந்தநாள் போன்ற நாட்களை ஏதேதோ விதத்தில் பணம் செலவழித்து வீணாக்காமல், இவர்களுக்கு உதவ வேண்டும். நம்மால் எந்த எந்த விதத்தில் எல்லாம் பிறருக்கு உதவமுடியுமோ, அந்த அந்த விதத்தில் எல்லாம் பிறருக்கு உதவ வேண்டும். அன்பு இல்லாத இடத்தில் ஆண்டவன் குடிகொள்ளவே மாட்டான். அன்பு இதயமே இறைவனின் கோவிலாகும்.

***Sri Hari :***

***Pranams to the Lotus feet of***

**HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**

**M/s. BUDDIES INFOTECH PRIVATE LIMITED**

*Web Designing and Application Development*

Old No. 22, New No. 34, Sriman Srinivasa Road,
Alwarpet, Chennai - 600 018.
Phone No. 044-421 44 662
e-mail : contact@buddiesinfotech.com

ஸ்ரீ ஹரி :

**ஸ்ரீ பிரேமிகவரதன் மருத்துவ முகாம், மஹாரண்யம், மதுரபுரி**

ஸ்ரீ சாந்தீபனி குருகுலம் ட்ரஸ்ட், சென்னை சார்பில் ஸ்ரீ பிரேமிகவரதன் இலவச மருத்துவ முகாம், மஹாரண்யம், மதுரபுரியில், மே மாத எல்லா ஞாயிற்றுக்கிழமைகளிலும் நடைபெற்றன.

**- Trustees**

# பாகவத முத்துக்கள்

- ஸ்ரீ ஸ்வாமிஜி

ஸ்ரீமத் பாகவதத்தில், ஸமீகர் என்ற மஹரிஷியின் குமாரன் ச்ருங்கி என்பவரால், பரீக்ஷித் ராஜாவிற்கு சாபம் ஏற்பட்டுவிட்டது. 'இன்றிலிருந்து ஏழாவது நாள் தக்ஷகன் என்ற பாம்பு கடித்து நீர் சாகக்கடவது' என்று சபித்துவிட்டார்.

மரணத்திலிருந்து தப்பிப்பதற்கு பரிஹாரம், தந்திரம், உபாயம் எதுவும் செய்யாமல், அந்த ஏழு நாட்களுக்குள், எதற்காக மனிதப்பிறவி அடைந்தோமோ, அதை அடைய விரும்பினான் ராஜா பரீக்ஷித். அரச வாழ்க்கையைத் துறந்து, உலக வாழ்க்கையைத் துறந்து கங்கைக் கரைக்குச் சென்றான். அங்கு தற்செயலாக, சுகமகரிஷி வந்தார். வியாசபுத்திரரும் கர்ப்பஸ்ரீமானும், ஜீவன்முக்தருமான சுகமகரிஷியை நமஸ்கரித்து, பரீக்ஷித் பின்வருமாறு துதி செய்தான்.

'புராண காலங்களில் அவதாரம் செய்த வசிஷ்டர், அகஸ்தியர், விஸ்வாமித்ரர், அத்ரி, ப்ருகு போன்ற மஹான்களின் உருவ சிலையையோ அல்லது சித்திரத்தையோ வைத்துக்கொண்டு, சிலர் வழிபடுகின்றார்கள். அந்த வழிபாடு, அவர்களையும், அவர்களைச் சேர்ந்தவர்களையும், வழிபடும் தலத்தையும் புனிதமாக்கி விடுகின்றது. (அதுபோல், இன்றும் பலர், ஆதிசங்கரர், ராமானுஜர், மத்வர், சைதன்யர், ராமகிருஷ்ணர், ரமணர் போன்ற அவதார புருஷர்கள், மஹாத்மாக்களின் உருவப் படங்களையோ, சிலா மூர்த்தங்களையோ வைத்து பூஜை செய்து பெரும் பலனை அடைகின்றார்கள்).

என்றோ, எங்கோ ஒரு மஹாத்மாவை ஸ்மரிப்பதே அவ்வளவு பாக்கியமும் புண்யமுமென்றால், நான் என்னுடைய சமகாலத்தில் வாழக்கூடிய, வசிக்கக்கூடிய உங்களை தரிசனம் செய்தும், உங்களை வழிபட்டும், உங்களுடைய திருவடியைத் தொட்டுப் பார்த்து, பேசி (ஸ்பர்ஸனம், தர்சனம், ஸம்பாஷணம்) இருக்கும் என்னுடைய பாக்கியத்தை என்னவென்று சொல்வது?' என்றான்.

ஞானத்தைத் தேடி கங்கைக் கரையை அடைந்த பரீக்ஷித்தைப் பார்த்து சுகமகரிஷி, அவனுடைய வைராக்கியத்தை மேலும் தீவிரமாக்க, அவனைப் பார்த்து சில வார்த்தைகள் பேசலானார். 'இல்லறத்தைத் துறந்து, கடவுளைத் தேட நாம் ஏன் தயங்க வேண்டும்? நதிகள் வற்றிவிட்டனவா? அல்லது மரங்கள் பழம் தருவதை நிறுத்திவிட்டனவா? அல்லது குகைகள் மூடப்பட்டு விட்டனவா? வீதிகளில் கந்தல் துணி கிடைக்காமல் போய் விட்டதா?' என்றெல்லாம் சொல்லிக்கொண்டு வந்த சுகமகரிஷி, கடைசியாக, 'வீட்டைத் துறந்து, தன்னையே நம்பி கிளம்பி வருகின்றவர்களை கைவிடுவதில்லை என்ற பிரதிக்ஞையை நாராயணன் வைத்துக்கொண்டு இருந்தானே அதை என்ன மாற்றிக்கொண்டுவிட்டானா என்ன!' என்று கேட்பது? இதயத்தைத் தொடுவதாக இருக்கிறது.

ஸ்ரீமத் பாகவதத்தின் 5வது ஸ்கந்தத்தில், ஜடபரதரின் சரித்திரம் வருகின்றது. ஜடபரதர், ரஹூகணன் என்ற சிந்து தேசத்து அரசனுக்கு, உபதேசம் செய்யும்பொழுது, 'சாஸ்திரங்களைப் படிப்பதாலோ, தவம் செய்வதாலோ, மந்திரங்களை ஜபம் செய்வதாலோ, சூரியனை உபாசிப்பதாலோ, ஞானம் வந்துவிடாது. ஒரு ஞானியின் சரணத்தில் விழுந்து புரளாதவரையில் ஞானம் ஏற்படாது' என்கின்றார். மேலும், 'ரஹூகணா, நீ எங்கு வசிக்கவேண்டும் தெரியுமா? எந்த இடத்தில் பகவானுடைய கதைகளை, அரசியல், ஹாஸ்யம், உலக விஷயங்கள், அக்கப்போர் போன்றவை கலக்காமல் தினமும் சொல்கின்றார்களோ, அந்த இடத்தில் போய் தினமும் வசிப்பாய். ஏனென்றால், பகவான் வாசுதேவன் அத்தகைய இடங்களில் நித்யவாஸம் செய்கின்றான்' என்கிறார்.

| | |
|---|---|
| சைதன்ய மஹாபிரபு நாமபிக்ஷா கேந்த்ரா சார்பில் சேலத்தில், காலை 8-11, மாலை 5-8 மணியளவில் நாமத்வார் இயங்கி வருகின்றது. | |
| திரு. S. வெங்கட்ராமன்<br>திருமதி. ஷீலா வெங்கட்ராமன் | ஸ்ரீவாரிதர்சன்,<br>காந்தி ரோடு, சேலம் - 636 007. |
| திரு. சதுர்புஜதாஸ் | சொர்ணபுரி<br>C69, பிள்ளையார் கோயில் தெரு<br>சேலம் - 536 004. |

# பிரியமே விரதமாக உடைய பிரியவிரதன்

- ஸ்ரீ ஸ்வாமிஜி

பிரும்மா தானாகவே ஆண் (ஸ்வாயம்புவமனு), பெண் (சதரூபை) என்ற மிதுனம் (இரட்டை) உருவத்தை எடுத்துக் கொண்டு பிரஜைகளை சிருஷ்டி செய்ய ஆரம்பித்தார். மனுவிலிருந்து நாம் அனைவரும் வந்திருப்பதால்தான், மனிதன், man, மனுஷ்யன், மானவன் போன்ற பெயர்கள் மனிதர்களைக் குறிப்பதற்கு அமைந்திருக்கின்றது என்று பெரியோர்கள் சொல்வார்கள். அந்த ஆதி தம்பதிகளுக்கு ஐந்து குழந்தைகள் பிறந்தார்களாம். அவர்களுக்கு ஆஹூதி, பிரஸூதி, தேவஹூதி, பிரியவிரதன், உத்தானபாதன் என்று பெயர்கள்.

இவர்களில் பிரியவிரதனுக்கு இந்தப் பெயர், காரணப் பெயராகவும் அமைந்தது. உலகத்தில் நாம் விரதம் அனுஷ்டிப்பது உண்டு. ஏகாதசி விரதம், சஷ்டி விரதம், வெள்ளிக்கிழமை விரதம் போன்றவைகள். ஹரிச்சந்திரன், மஹாத்மா காந்தி போன்றவர்கள் சத்தியத்தையே பேசுவது என்பதை விரதமாக வைத்திருந்தார்கள். அதுபோல், பீஷ்மர் பிரம்மச்சர்யத்தைக் காப்பாற்றுவதையே தன்னுடைய விரதமாக வைத்திருந்தார். தினமும், ஒரு அடியாருக்கு அன்னமிட்டு விட்டு உண்பது என்பதை பல அடியார்கள் விரதமாக வைத்திருந்தார்கள். அதுபோல், சகல ஜீவராசிகளிடமும் பிரியத்தை கொட்டுவது என்பதை தன் விரதமாக வைத்துக்கொண்டிருந்ததாலும் அவனுக்கு பிரியவிரதன் என்று பெயர்.

அப்படி எப்படி பிரியத்துடன் இருக்க முடியும் என்றால், அதற்கு ஒரு வழி உள்ளதாம். என்ன அது? உலகத்தில், நல்லதோ, கெட்டதோ எது நடந்தாலும், உன்னுடைய நண்பர்கள், பக்கத்தில் உள்ளவர்கள் எல்லோரும் எப்படி நடந்தாலும், என்ன செய்தாலும், ஸ்ரீ கிருஷ்ணன் இஷ்டம் என்று பார்த்துவிட்டால் அப்படி இருக்க முடியுமாம். எது, எங்கு, எப்பொழுது, எப்படி நடந்தாலும் இப்படிப் பார்ப்பவர்களுக்கு, பகவான் ஸ்ரீ கிருஷ்ணனே அவனை துன்புறுத்த வேண்டும் என்று நினைத்தாலும் துன்பத்தைக் கொடுக்கவே முடியதாம். ஏன்? அப்படி துன்பத்தைக் கொடுத்தாலும் அதுவும் பகவான் இஷ்டம் என்று இருந்துவிடுவானாம்.

பிரியவிரதன், இல்லற வாழ்க்கையில் ஈடுபட இஷ்டமின்றி தவம் செய்ய போய்விடுகின்றார். பிரும்மா, பிரியவிரதனுடைய தகப்பனாரான மனுவைப் பார்த்துவிடுகின்றார். மனு மிகவும் வருத்தமாக இருப்பதைப் பார்த்து, பிரும்மா அதற்கான காரணத்தைக் கேட்கின்றார். தன்னுடைய குழந்தை பிரியவிரதன், தவத்திற்குச் சென்றுவிட்டதை நினைத்து வருத்தமாக இருப்பதாக தெரிவித்தார். ''குழந்தை தவம் செய்வதுதானே உத்தமம். இதை நினைத்து தாங்களே வருத்தப்படலாமா?'' என்கின்றார் பிரும்மா.

அதற்கு ஸ்வாயம்புவமனு, ''என் குழந்தை தவம் செய்வதை நினைத்து எனக்கு சந்தோஷம்தான். நான் அவனிடம் பொறுப்பைக் கொடுத்துவிட்டு தவம் இயற்றச் செல்லலாம் என்றிருந்தேன். அதற்குள், அவன் முந்திகொண்டுவிட்டானே என்பதுதான் என் வருத்தம்'' என்றார். இது எப்படி இருக்கின்றது என்றால், சில வீட்டில், தகப்பனார், குழந்தைகள் வளர்ந்து ஒரு பொறுப்பு வந்தவுடன் தான் VRS வாங்கிக்கொண்டு சத்சங்கத்தில் முழுவதுமாக ஈடுபடலாம் என்று நினைத்திருப்பார். அதற்குள், வேலையை எல்லாம் விட்டுவிட்டு பையன் ஏதாவது கோவில் குளம் என்று போய்விடுவான். அதுபோல், தமது கதையை போலும் நினைத்து ஸ்வாயம்புவமனு வருத்தப்படுகின்றார்.

பிரும்மா நாரதருடன் சென்று, இல்லறத்தின் பெருமைகளை எடுத்துச் சொல்லி, பிரியவரதனை அவன் நாட்டிற்கு திரும்ப வேண்டியதற்கானக் காரணங்களை அழகாக எடுத்துரைக்கின்றார். அதற்கு பிரியவிரதன் சொல்லும் பதில் அழகானது. ''சாதுக்களான நீங்கள் என்னைப் பார்த்து இதை செய், இதைச் செய்யாதே என்று உத்தரவிட்டீர்களானால் அதை அப்படியே கேள்வி கேட்காமல், விசாரிக்காமல், சிரமேற்கொண்டு செயல்படுத்தவே விரும்புகின்றேன்'' என்றான். ''நீங்கள் எனக்கு காரண காரியங்களை எடுத்துரைப்பது தேவையில்லாதது. அது எனக்கு வருத்தத்தை தருகின்றது'' என்றும் கூறினான். பிறகு, நாட்டிற்கு வந்து சாதுக்கள் உத்தரவின்படி இல்லறத்தில் ஈடுபட்டு பிரஜைகளை உண்டுபண்ணினான். அவன் அப்படிப்பட்டவனாக இருந்ததால்தான் என்னவோ அவனுடைய வம்சத்தில் நாபி, ரிஷபயோகீஸ்வரர், ஜடபரதர் போன்ற உத்தமமான பிரும்ம ஞானிகள் வந்தார்கள்போலும்.

# ஸ்ரீ ஸ்வாமிஜியுடன்...

தமிழ்ப் புத்தாண்டை ஒட்டி வருடாவருடம் பிரேமிக பவனத்தில் பஞ்சாங்கபடனம் படிப்பது வழக்கம். இவ்வருடமும் அப்படி ஏப்ரல் 13-ஆம் தேதி நடைபெற்றது. ஏப்ரல் 13, 14 தேதிகளில் சென்னை அண்ணாநகர் டாக்டர் கனகராஜ் அவர்கள் வீட்டில் நடைபெற்ற திவ்யநாம பஜனையிலும், சீதா கல்யாணத்திலும் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் கலந்துகொண்டார்கள்.

மறுநாள், ஏப்ரல் 15-ஆம் தேதி. அன்று, நாமத்வார் இணையதள பொறுப்பாளர் திரு. P.S. நாராயணன் மஹாரண்யத்தில் கட்டியுள்ள புதுமனை புகுவிழா, ஸ்ரீ ஸ்வாமிஜி முன்னிலையில் மஹாமந்திர நாமகீர்த்தனம் செய்து நடைபெற்றது. ‘பகவான், க்ருஹத்திற்குள் ப்ரவேசிப்பதே க்ருஹப்ரவேசம்’ என்று கூறிய ஸ்ரீ ஸ்வாமிஜி, ‘மிகவும் சிம்பளாக முடிந்து விட்டதே’ என்றும் சொன்னார்கள்.

மஹாரண்யம் ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸ பெருமாள் திருக்கோயிலைச் சுற்றிலும் உள்ள பல கிராமங்களில், அநேக பக்தர்கள், ஒரு குழுவாக இருந்து, மஹாமந்திரம் பாடி, பெருமாளைக் கொண்டாடி வருகிறார்கள். அவர்களுள் ஒருவர்தாம் திரு. ஜயராமனும் அவர் தம் குமாரர் திரு. தண்டபாணியும்.

ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள், ‘‘எந்த ஒரு நிகழ்ச்சியையும், நாம கீர்த்தனத்தினாலேயே தொடங்கி, நாமகீர்த்தனத்தினாலேயே நடத்தி, நாமகீர்த்தனத்தினாலேயே பூர்த்தி செய்யவேண்டும்’’ என்று சொல்வார்கள். அவர்கள் வார்த்தையின்படியே தமது திருமணம் நடைபெறவேண்டும் என்று ஆசைகொண்டார் திரு. தண்டபாணி. ஏப்ரல் 16-ஆம் தேதி ஸ்ரீபெரும்புதூரில் அவருடைய திருமணம், ஸ்ரீ ஸ்வாமிஜி முன்னிலையில், ‘ஹரே ராம’ மஹாமந்திர நாமகீர்த்தனம் அனைவரும் சொல்ல, இனிதே நடைபெற்றது. பிறகு ஸ்ரீ ஸ்வாமிஜி திருநாங்கூர் சென்றார்கள்.

நமது ஸ்வாமிஜியின் நாமப்பணிக்காக தம் வாழ்க்கையை அர்ப்பணித்து வாழ்ந்த ஸ்ரீமதி ஜெயந்தி ஜானகிராமன் அவர்கள்

நினைவாக, திருநாங்கூரில் திராவிட வேத ஆகம பாடசாலை ஒன்று இயங்கி வருகிறது. நாங்கூரில், மஹாஸம்ப்ரோக்ஷணம் நடைபெற இருக்கும் ஸ்ரீ வண்புருஷோத்தன் பெருமாள் திருக்கோயிலுக்குச் சென்றார்கள். பிறகு, ஸ்ரீ நாராயணபெருமாள் திருக்கோயிலுக்குச் சென்று, ஹம்ஸ வாஹனத்தில் பெருமாள் புறப்பாட்டை தரிசனம் செய்து, அன்று இரவு, கோவிந்தபுரம் சென்று அங்கு தங்கினார்கள்.

மறுநாள் 17-ஆம் தேதி காலை, கோவிந்தபுரத்திலிருந்து கிளம்பி, மதுரை நாமத்வாருக்குச் சென்று அங்கு தங்கி, பிறகு மாலை சிவகாசி சென்றடைந்தார்கள். சிவகாசியில் சுமார் 400 அன்பர்கள், ஸ்ரீ ஸ்வாமிஜியை வரவேற்க, அன்று மாலை பிரார்த்தனை கூட்டத்தில் 7000 அன்பர்கள் கலந்துகொண்டனர். பிரார்த்தனை கூட்டம் இனிது நடந்தது. ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் பேசுகையில், ''உலகம் முழுவதும் நாமம் சொல்லப் போகின்ற நாள் வெகுதூரத்திலில்லை'' என்றார்கள்.

சிவகாசியில், நாமத்வார் அமைத்து நடத்திவரும் திருமதி ஐஸ்வர்யா குமாரவேல், பவானி அக்கா மற்றும் அன்பர்களை வெகுவாக பாராட்டி ஊக்குவித்துவிட்டு, ஏப்ரல் 18-ஆம் தேதி மதியம், திருநெல்வேலியில் அம்பிகா காஃபி ஹவுஸ் அன்பர் வீட்டில் ஒரு சிறு சத்சங்கம் நிகழ்த்திவிட்டு, மதுரை வழியாக கோவிந்தபுரம் திரும்பினார்கள். மதுரையில் உள்ள நாமத்வார், Divine Life Society, மதுரை, சேர்ந்த ஸ்ரீ சுந்தரானந்த சரஸ்வதி ஸ்வாமிகள் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அதை திரு. நரஹரிதாஸ் கவனித்து வருகிறார்.

ஏப்ரல் 19, 20 தேதிகளில் ஸ்ரீ ஸ்வாமிஜி சென்னையில் தங்கினார்கள். வழக்கம்போல் ஸ்வாமி பூஜை, அன்பர்கள் தரிசனம் இருந்தது. ஏப்ரல் 20-ஆம் தேதி சித்ரா பௌர்ணமி. அன்று காலையில் கடலூரில், திரு ரவி அவர்களின் புதிய அலுவலக திறப்பு விழாவிற்குச் சென்று, சென்னை திரும்பி, மதியம், மந்தைவெளி திரு. குப்புசாமி இல்லம் சென்றார்கள். மாலையில், வேலூரில் மஹாமந்திரப் பிரார்த்தனைக் கூட்டம். வேலூர் கேந்திரா சார்பில், ஸ்ரீ வெங்கடேஸ்வரா மேனிலைப் பள்ளி வளாகத்தில் அமைந்துள்ள அரங்கில் நாமகீர்த்தன கூட்டுப்பிரார்த்தனை நடைபெற்றது. அன்று கடுமையான வெயில்.

தரை கூட சுட்டது. இருப்பினும், அந்த வெய்யிலையும் பொருட்படுத்தாது சுமார் 2500 அன்பர்கள் கூடி இருந்தனர்.

இந்தப் பிரார்த்தனை கூட்டத்தில் பல புதிய விஷயங்களை ஸ்ரீ ஸ்வாமிஜி பேசினார்கள். ''நாமம் சொல்லாதிருப்போரைவிட, நாமத்தின் மேலும், கடவுளின் மேலும் நம்பிக்கை வைப்பது தவறு எனச் சொல்வோரைதான், மிகவும் பாவம் புரிந்தவராக கருதுகிறேன்'' என அவர் சொன்னபொழுது, ஆச்சரியமாக இருந்தது. பல குற்றங்களை வரிசைப்படுத்திய ஸ்ரீ ஸ்வாமிஜி, ''இவற்றிலிருந்து நாமகீர்த்தனம் செய்து எளிதில் விடுபடலாம்'' என்றும் கூறினார்.

நாமகீர்த்தன பிரார்த்தனை முடிந்தவுடன், கடைசி அன்பருக்குக் கூட தரிசனமும், தன் கையினால் பிரசாதமும் ஸ்ரீ ஸ்வாமிஜி அளித்தார்கள். ஸ்ரீ பிரகாஷ் குருக்கள், திரு. துளஸீராமன், திரு. அச்சுதன், திரு. குமரேசன், திரு. மோகன்குமார் மற்றும் வேலூர் அன்பர்கள் மிகவும் சிரத்தையுடன் ஏற்பாடுகளைச் செய்திருந்தனர். பல இளைஞர்களும் பங்குகொண்டனர். ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் வேலூரிலிருந்து புறப்பட்டு இரவு பெங்களூர் சென்றடைந்தார்கள்.

வேதவியாசர் கொடுத்த இதிஹாஸப் புராணங்களைக் கற்றுத்தர ஒரு பாடசாலையை, பெங்களூரில், ஸ்ரீ ஸ்வாமிஜியின் அருளாணையின் பேரில் அன்பர்கள் நிறுவி வருகின்றனர். ஒருமுறை, அவ்விடத்தில், ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் தியானத்தில் இருந்தபொழுது, ''ஆஞ்சநேயரின் சான்னித்யம் முழுவதுமாய் இங்கு உள்ளது'' என்று தெரிவித்து, விண்ணில் ஆஞ்சநேய சொரூபம் பூரணமாய் அவ்வமயம் தெரிவதையும் திரு. சங்கர நாராயணன் அவர்களுக்கு காண்பித்து அருளினார். ஆலயம் கட்ட சங்கல்பம் செய்ய வேண்டுமென்றபொழுது, 'பெரிய பணியாயிற்றே' என்று அன்பர் சொல்ல, ஸ்ரீ ஸ்வாமிஜி புன்முறுவலுடன், ''நான் ஆசைப்படவில்லை. ஆஞ்சநேயர் ஆசைப்படுகிறார்'' என்றார். திரு. சங்கரநாராயணனும் இந்த மகத்தான பணியை சிரமேற்கொண்டு மிகவும் சிறப்பாக செய்து முடித்தார். பெங்களூர் அன்பர்கள் ஒரு குழுவாக செயல்பட்டு அவருக்கு பக்கபலமாக இருந்தனர்.

பெங்களூர், ராமமூர்த்தி நகரில் தங்கி, ஏப்ரல் 21-ஆம் தேதி முதல் கும்பாபிஷேகத்தை ஒட்டி ஏற்பாடு செய்யப்பட்ட யாகசாலை நிகழ்ச்சிகளிலும் கலைநிகழ்ச்சிகளிலும் ஸ்ரீ ஸ்வாமிஜி கலந்து கொண்டார்கள்.

அங்கு நடந்த யக்ஷகானம் நிகழ்ச்சி ஸ்ரீ ஸ்வாமிஜியை வெகுவாக கவர்ந்தது. மறுநாள், அருகில் உள்ள சரஜ்பூர் என்றும் கிராமத்திற்குச் சென்றார்கள். ஊர் பெரியவர்களுடன், 30-40 குழந்தைகள் மஹாமந்திர கீர்த்தனம் சொன்னார்கள்.

ஏப்ரல் 24-ஆம் தேதியன்று மாலை கும்பாபிஷேகத்தைச் தரிசனம் செய்ய பல ஆயிரம் பக்தர்கள் குவிந்தார்கள். இக்கோயிலின் நிர்மாணத்திற்கு வெகுவாக பொருள் உதவி செய்த டில்லியைச் சேர்ந்த J.K. ஸ்ரீவத்ஸவா அவர்களின் குடும்பத்தினரும் நண்பர்களும் இவ்விழாவிற்கு வந்திருந்தனர்.

இக்கோயிலின் கோபுரம் ஒரிஸா - புரி - ஜகன்னாதர் கோயில் கோபுரம் போன்றமைந்துள்ளதும், வெகு தொலைவிலிருந்தும் எல்லோரின் கவனத்தையும் ஈர்க்கவல்ல உயரம் உள்ளதாக இருப்பதும் குறிப்பிடத்தக்கது. ஏப்ரல் 25-ஆம் தேதியன்று காலையில் கும்பாபிஷேகம் நடைபெற்றது.

VEECON Music, Mumbai, ஸ்ரீ ஆதேஷ் ஸ்ரீவாத்ஸவ் என்ற பிரபல இசையமையாளர் இசையமைத்துள்ள ஹனுமான் சாலீஸா CD முதன்முறையாக இசைக்கப்பட்டது. இதில், பல பிரபல கலைஞர்கள் பாடியுள்ளார்கள். அப்பொழுது ஸ்ரீஸ்வாமிஜி உரையாற்றுகையில், ‘எவ்வாறு பீஷ்ம சஹஸ்ரநாமத்தை இயற்றும்போது சாக்ஷாத் கிருஷ்ண பரமாத்மாவே அருகில் நின்று கேட்டாரோ, அதேபோல், ஹனுமான் சாலீஸாவை இவர்கள் இசைக்கும்போது சுந்தர ஆஞ்சநேயர் பிரத்யக்ஷமாக இங்கு கேட்கிறார்’ என்று கூறினார்கள்.

மாலையில், ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் (உத்ஸவ மூர்த்தி) கன்னட பிரதேச சம்பிரதாயப்படி, வாத்திய கோஷம், நாமகீர்த்தனத்துடன் புறப்பாடு கண்டருளினார். வாண வேடிக்கைகளும் வெகு விமரிசையாக நடைப்பெற்றது. உற்சவ மூர்த்தி புறப்பாட்டின் பொழுது பார்த்தால், ஒரு சிறு ஆஞ்சநேயர் கொள்ளை அழகுடன், தங்கமாய்

கிளம்பிவிட்டது போலிருந்தது. ஆஞ்சநேயரின் அலங்காரமும், தோற்றமும் மனதில் சற்றும் விலகாமல் மறுபடி அங்கு சென்று தரிசனம் செய்ய விழையும்படி இருந்தது. சுந்தர அனுமான் - பெயர் போன்ற அழகிய ஸ்வாமியன்றோ!

ஏப்ரல் 27-ஆம் தேதியன்று பெங்களூரிலிருந்து சென்னை திரும்பினார்கள். மறுநாள், சென்னையிலிருந்து திருவண்ணாமலை சென்று திரும்பி மாலையில் பிரேமிகபவனத்தில் சத்சங்கத்தில் ஆதிசங்கரர் பற்றி பேசியபிறகு அங்கு தங்கினார்கள்.

ஏப்ரல் 30-ஆம் தேதியன்று மதுரபுரியில் ஸ்ரீ சாந்தீபனி குருகுலத்தின் ஆண்டுவிழாவில் கலந்துகொண்டு, பகவத்கீதை, சமஸ்கிருதம், விளையாட்டுப் போட்டிகள் முதலியவற்றில் வெற்றிப் பெற்ற பாடசாலை மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கிப் பாராட்டினார்கள்.

மே முதல் தினத்தன்று ஏகாதசியை ஒட்டி சுமார் 600 அன்பர்கள் மதுரபுரி ஆஸ்ரமத்திற்கு வந்திருந்தனர். தம்மை நாமப்பணிக்காக அர்ப்பணித்து இருப்போரை தனியே கூப்பிட்டு விசாரித்த வண்ணம் இருந்தார்கள். ஸ்ரீ ஸ்வாமிஜியின் கை அலர்ஜி குறைந்தபாடில்லை. வந்த பெரும்பாலானோரிடம் ஓரிரு வார்த்தைகளாவது பேசியவண்ணம் தீர்த்தம் கொடுத்தார்கள். கடுமையான வெய்யில் எனினும் கூட்டம் அதிகமாக இருந்தது,

மே 2, 3, 4 தேதிகளில் சென்னை, குரோம்பேட்டை நெமிலிச்சேரி வேதபவனில் உபன்யாசம். அங்குள்ள வேதபாடசாலை குழந்தைகளைப் பார்த்தவுடன் பெரும் மகிழ்ச்சி ஸ்ரீ ஸ்வாமிஜிக்கு. உபன்யாசங்களில் இது பல்வேறுவிதமாய் வெளிப்பட்டது. ''உபன்யாசம் கேட்பவர்கள் மௌனமாய் இருந்து, கவனித்து, ஆடாமல் அசையாமல் இருப்பதால் இதுவே அஷ்டாங்கயோகத்தின் அடிப்படை'' என்ற சிரவணத்தின் பெருமையைக் கூறியது புதுமையாக இருந்தது.

மே 5-ஆம் தேதி முதல் மே 11-ஆம் தேதி வரை தஞ்சாவூரில் ஸ்ரீமத் பாகவத சப்தாஹம். காலையில், மதுரமுரளிபவனம் திரு. ராஜகோபால் அவர்கள் இல்லத்தில் பாராயணம். மாலையில், மேலவீதி ஸ்ரீ நவநீதக்ருஷ்ணன் திருக்கோயிலில் உபன்யாசம்.

இப்படி ஏழு நாட்கள். தினம் 25 பேர் பாராயணம். 400 பேர் கதா சிரவணம். ''ஸ்ரீமத் பாகவத சப்தாஹத்தில் ஸ்ரீ சங்கர ஜெயந்தி, ஸ்ரீ ராமாநுஜ ஜெயந்தி, அக்ஷய திருதியை ஆகியவை கூடியதாக இருக்க வேண்டும் என்பது கிருஷ்ணனின் விருப்பம்போல் இருக்கின்றது'' என்று ஸ்ரீ ஸ்வாமிஜி சுவைபட தெரிவித்தார்கள். மே 7-ஆம் தேதி, ரோஹிணி நக்ஷத்திரத்தன்று, நவநீதகிருஷ்ணனுக்கு அர்ச்சனை, நைவேத்தியம் பிரகார புறப்பாடு எல்லாம் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் முன்னிலையில் மஹாமந்திரம் கீர்த்தனத்துடன் நடைபெற்றது.

மே 8-ஆம் தேதி அக்ஷய திருதியையன்று நமது கேந்த்ராவின் மஹிளாமண்டலி சார்பில், தஞ்சையில் 40 கோவில்களில் நடைபெறும் மஹாமந்திர நாமகீர்த்தன வார வழிபாட்டு பொறுப்பாளர்கள் 35 பேரை சந்தித்துப் பேசினார்கள். ஒவ்வொருவரையும் விசாரித்து நாமம் சொல்வது பற்றிக் கூறினார்கள். மே 9-ஆம் தேதியன்று மன்னார்குடி ஸ்ரீ ராஜகோபாலஸ்வாமி திருக்கோயில் சென்று சுவாமி தரிசனம் செய்து தஞ்சாவூர் திரும்பினார்கள். நவநீதகிருஷ்ணனுக்கு சஹஸ்ரநாம அர்ச்சனை செய்தார்கள். ஸ்ரீ சங்கர ஜயந்தி நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு ஆதிசங்கரர் பற்றி பேசினார்கள்.

10ஆம் தேதியன்று அன்பர் ஒருவருடன் மாயவரம் சென்றார். வழியில் மங்கையநல்லூரில், ஒரு இடத்தில் ராதா கல்யாணம். அவர் அந்த இடத்தை கட்டிவிட்டு, ஸ்ரீ ஸ்வாமிஜி வந்தால்தான் திறப்பு விழா என்றிருந்தார். ஸ்ரீ ஸ்வாமிஜி, தஞ்சை வந்ததை அறிந்த அவர் ஸ்ரீ ஸ்வாமிஜியை அழைத்து அதன் திறப்பு விழாவும், அங்கு ராதாகல்யாணமும் நடத்திவிட்டார். பிறகு ஸ்வாமிஜி, அங்கிருந்து அன்பகம் என்றொரு மனநல இல்லத்திற்கு சென்றார்.

மே 10-ஆம் தேதி மாலை 6.00 மணிக்கு சிவகங்கா பூங்கா அருகிலில் உள்ள ஹனுமார் கோவிலிருந்து நகர ஸங்கீர்த்தனம் ஆரம்பித்து ஸ்ரீ நவநீதக்ருஷ்ணன் கோவிலில் பூர்த்தியாகியது. சுமார் 600 பேர் இதில் கலந்துகொண்டார்கள். கோவில் பிரகாரத்தில் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் மஹாமந்திரம் சொல்லி கையைத் தூக்கிக் கொண்டு பாடி நர்த்தனம் செய்தது எல்லோருக்குமே ஒரு ஆனந்த

பரவசத்தை ஏற்படுத்தியது. மே 11-ஆம் தேதியன்று காலையில் திரு. V. ராமகிருஷ்ணன் அவர்கள் கட்டியுள்ள ஆண்டாள் திருமண மண்டப திறப்பு விழாவில் கலந்துகொண்டு ''ஆண்டாள் கல்யாணம்'' பற்றிப் பேசினார்கள். 'நாம அனுபவம்' புத்தகம் வெளியிட்டார்கள். தஞ்சையில் இருந்தபொழுது ஸ்ரீ நவநீதக்ருஷ்ணன் கோவில் பிரவசன மண்டபத்தை RCC மேல் தள மண்டபமாக்க நடைபெற்ற பூமிபூஜையிலும் கலந்துகொண்டார்கள். அன்பர்களின் இல்லங்களுக்கும் சென்று வந்தார்கள்.

தஞ்சைக் கேந்திராவைச் சேர்ந்த திரு. N ராஜகோபால், திருமதி சாவித்ரி ராமகிருஷ்ணன், திருமதி கீதா தண்டபாணி மற்றும் தஞ்சை கேந்திரா அன்பர்கள் ஏற்பாடுகளை சிறப்பாகச் செய்திருந்தனர்.

ஸ்ரீ ராமநவமியை ஒட்டி, சென்னை பிரேமிகபவனத்தில் ஏப்ரல் 7-ஆம் தேதி முதல் 15-ஆம் தேதி வரை, ஸ்ரீமத் ராமாயண நவாஹ பாராயணம் நடைபெற்றது. ஏப்ரல் 16-ஆம் தேதி முதல் ஏப்ரல் 20-ஆம் தேதி வரை ஏகதின சுந்தரகாண்டம் பாராயணம் நடைபெற்றது.

---

✸ வேலூர் மாநகரம் வடஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்தது. ஆற்காடு (ஆரண்யம்) எனும் சொல், 'காடு' என்பதிலிருந்து வந்ததுதான். வடக்கில் இருக்கும் காடு, வடஆற்காடு (உத்தர ஆரண்யம்) என்றும், தெற்கில் இருக்கும் காடு, தென் ஆற்காடு (தக்ஷிண ஆரண்யம்) என்றும் குறிப்பிடப்படுகிறது. ஒருகாலத்தில் இவை அனைத்தும் காடுகளாகவே இருந்திருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

✸ மதுரை ஸ்ரீ மீனாக்ஷி அம்மன் திருக்கோயிலில் நான்கு கோபுரங்கள் உள்ளன. ஒவ்வொரு கோபுரத்தில் இருக்கும் சிற்பங்கள் நமது மதத்தில் உள்ள சைவ, வைணவ, சாக்த மதங்களுக்கு எடுத்துக்காட்டாக உள்ளன. இங்கு 16 கோபுரங்கள் உள்பிரகாரத்தில் உள்ளது. சிற்பக்கலையில் உயர்ந்து விளங்குகிறது இக்கோயில்.

**- வேலூர் கூட்டுப்பிரார்த்தனையில் ஸ்ரீ ஸ்வாமிஜி உபன்யாசத்தில் கேட்டது**

# மனவலிமை என்னும் மாபெரும் சக்தி

நம் ஸ்வாமிஜி அவர்கள், தமது அருளுரைகளில் கூறும்பொழுது, ''நாம் சிறு குழந்தைகளாக இருந்தபொழுது, நமது பெற்றோர்கள், உரிய காலத்தில் மருத்துவரிடம் அழைத்துச்சென்று, தடுப்பூசிகள் போட்டும், ஊட்டச்சத்துமிக்க உணவுப் பொருட்களை ஊட்டியும், நமது உடல் ஆரோக்கியத்தைக் கண்ணும் கருத்துமாக பேணி வளர்கின்றார்கள். அதற்கு அடுத்தப்படியாக, பள்ளிக் கூடங்களில் சேர்த்து, பல அரிய விஷயங்களைப் பயிற்றுவித்தும் நமது அறிவுத்திறனை வளர்க்கின்றார்கள். ஆனால், பெரும்பாலும், உடலையும், அறிவையும் வலிமைப்படுத்துவதுடன், நமது முயற்சி நின்றுவிடுகின்றது. இவ்விரண்டையும் தாண்டி நம் ஒவ்வொருவருள்ளும் 'மனவலிமை' என்ற ஒரு மாபெரும் சக்தி உள்ளது. அதை வளர்த்துக்கொள்ள நாம் பெரும்பாலும் முயற்சிப்பதே இல்லை'' என்று சொல்வார்கள்.

மனவலிமை என்பது ஓர் ஆச்சரியமான சக்தி. தனது மனதின் வலிமையை உணர்ந்தவர்கள், உலகில் சாதித்த சாதனைகள் எண்ணற்றவை. அவர்களால் பல வல்லரசுகள் உருவாகியும் உள்ளன. மாறாக, அவர்களின் பிடியில் சிக்கி அழிவை நோக்கிச் சென்றும் உள்ளன.

உதாரணமாக, ஏறத்தாழ 150 ஆண்டுகளுக்கு முன் பிறந்து ரஷ்ய வல்லரசையே தன் பிடிக்குள் கொண்டு வந்து உலகையே அச்சுறுத்தியவர் ரஸ்புடின் (RASPUTIN). ஒரு வல்லரசைத் தன் பிடிக்குள் கொண்டு வந்துவிட்டதால் இவர் ஒரு அஞ்சாநெஞ்சம் கொண்ட போர் வீரரோ அல்லது தலைவரோ என்று எண்ணிவிட வேண்டாம்.

ரஸ்புடின், ஒரு சாதாரணமான விவசாயி குடும்பத்தில் பிறந்தவர். சிறு வயதுமுதலே இவரது அபாரமான மன வலிமையினால், இவரால், பல அதிசயங்களை நிகழ்த்த முடிந்ததாக சொல்லப்பட்டுள்ளது. தன்னிடமிருந்த இந்த அதிசய சக்தியினால் பலரின் நோய்களைப் போக்கியுள்ளார். ஏதாவது ஒரு

பொருள் காணாமல் போகுமானால், அது அப்பொழுது எங்கு உள்ளது என்பதையும், அதைத் திருடியவர் யார் என்பதையும் துல்லியமாகச் சொல்லிவிடுவார். இவருக்கு இறை நம்பிக்கை இயல்பாகவே இருந்தது. ஆனால், உலக ஆசைகளும் அவரை விட்டபாடில்லை. கடுமையாக தவங்கள் செய்து, அதிசய சக்திகளைப் பெற்று அதன்மூலம் தான் நினைத்தவற்றை சாதிக்கவேண்டும் என்று எண்ணினார் ரஸ்புடின்.

அவரது கனவு நனவாகும் ஒரு சந்தர்ப்பமும் வந்தது. ரஷ்ய நாட்டின் இளவரசனுக்கு ரத்த சம்பந்தமான ஒரு தீராத வியாதி இருந்தது. அதை எந்த மருத்துவராலும் குணப்படுத்த முடியவில்லை. அப்பொழுது ரஸ்புடினைப் பற்றி கேள்விப்பட்டு ரஷ்ய அரசி அவரை அணுக, அவரும் தனது சக்தியினால் அந்த வியாதியை ஓரளவுக்கு கட்டுப்படுத்தினார். இதன் மூலமாக அவருக்கு மெல்லமெல்ல அரச குடும்பத்துடன் ஒரு நெருக்கம் ஏற்பட்டது. குறிப்பாக, அரசி ரஸ்புடினை இறைவனின் தூதராகவே எண்ணி அவரது வாக்கை இறைவாக்காகவே ஏற்றுக்கொண்டார்.

இந்த ஒரு சந்தர்ப்பத்தை எதிர்நோக்கியிருந்த ரஸ்புடினும் அந்த வாய்ப்பை தன் இருகைகளாலும் பற்றிக்கொண்டார். மெல்ல மெல்ல ரஷ்ய அரசின்மீது அவரது பிடி இறுகியது. எந்தப் பதவியில் யாரை நியமிப்பது என்பதில் தொடங்கி அரசின் எல்லா முடிவுகளும் அவர் இஷ்டம் என்றாகிவிட்டது. இதை அந்த நாட்டு மக்களும், அரசு அதிகாரிகளுமே விரும்பவில்லை. அவரிடம் ஆச்சரியமான சக்திகள் இருந்ததால் அவரை எதிர்க்கவும் அனைவரும் அஞ்சினார்கள். அவரிடமிருந்து நாட்டை எப்படி மீட்பது என்று பலவாறு யோசித்து இறுதியில் அவரைக் கொன்றுவிட திட்டம் தீட்டப்பட்டது.

அத்திட்டத்தின்படி, ரஸ்புடின், அரசு அதிகாரிகள் சிலரால் ஒரு விருந்திற்கு அழைக்கப்பட்டார். அவருக்கு அளிக்கப்பட்ட உணவில் விஷம் கலந்துவிட்டனர். விஷத்தின் அளவு மிக அதிகம். ஆனால், அது அவரை ஒன்றும் செய்யவில்லை. செய்வதறியாது திகைத்த அதிகாரிகள், அவரை துப்பாக்கியால் நான்கு முறை சுட்டனர். அதன்பின்னரும் அவர் எழுந்துவிட முற்படவே, அவரை ஆழமான நதியில் மூழ்கடித்ததாக கூறப்பட்டுள்ளது. இறுதியில்

அவர் மூழ்கி இறந்ததாகவே அவரது பிரேதப்பரிசோதனை காட்டியது. எளிய விவசாயி குடும்பத்தில் பிறந்து, ரஷ்ய நாட்டையே கையகப்படுத்தி, உலக நாடுகளை அச்சுறுத்தி, இறுதியில் அவரது அழிவிற்கு வழி வகுத்ததும் அவரது மனதின் வலிமையே. மனவலிமை படைத்தவர்கள், அதை தவறான வழியில் செலுத்தி, அழிவிற்கு வழிவகுத்தது ஒருபுறமிருக்க, மறுபுறம், உலகம் வியக்கும் சாதனைகளும் பல அரிய கண்டுபிடிப்புகளும் ஏற்பட்டுள்ளதும் அதே மனவலிமையினால்தான். இந்த மனது என்ற அற்புத ஆற்றலை நம்மை சரிவர உணரச் செய்து நெறிப்படுத்தி, அதையும் தாண்டி நம்மிடமுள்ள ஆத்ம சக்தியை அறியச் செய்வதே உலகிலுள்ள எல்லா மதங்களின் நோக்கமாகும்.

– டாக்டர் பாக்யநாதன் ஆதிமூர்த்தி

## புதிய வெளியீடுகள் - Books in English

**Simple Questions, Simple Answers**
His Holiness Sri Sri Muralidhara Swamiji expounds the highest Truths, in a short and sweet manner.

**Sri Bhoopadeva**
Life sketch of a great saint who was instrumental in bringing back Srimad Bhagavatam to this world.

**As it Strikes Me**
A collection of Sri Sri Swamiji’s unique thoughts that enthralls an open mind.

**God**
A very small ‘close to the heart’ pocket book takes the concept of God to the heart.

**Blissful Blossoms**
A compilation of saying of Sri Sri Swamiji.

**The Birth of Srimad Bhagavatam**

**Srimad Bhagavatam - An Introduction**

Contact Ph : 044-24895875 for queries regarding, Madhuramurali, Books, Audio tapes & CDs

# மாலே மணிவண்ணா - 62

- மஹாவித்துவான் மயிலம்.வே. சிவசுப்பிரமணியன்

'வானளாவிய புகழ்' என்பார்கள். வானம் எல்லாவற்றையும் தன்னுள் அடக்கிக்கொண்டு மேலும் கீழுமாக விரிந்து பரந்து சென்றுகொண்டேயுள்ளது. அதற்கு முடிவேயில்லை - உலகமே உருவமான எம்பெருமானின் புகழுக்கும் முடிவே இல்லை - புகழுக்கு முடிவில்லை ஆதலின் அவனைப் புகழ்வதற்கும் முடிவு இல்லை; புகழப்புகழ புகழ வேண்டும் என்னும் ஆசை மேலும் அதிகமாகிறது. பரந்து விரிந்த திருமாலின் பல்புகழையும் பரிபாடல் மேலும் துதிக்கிறது.

சங்கக் காலத்தில் நாற்பெருங்கடவுள் வழிபாடு தமிழகத்தில் நன்கு நிலவியிருந்தது. சிவபெருமான், முருகன், பலராமன், கண்ணன் ஆகிய நான்கு பெருங்கடவுள்களையும் வழிபாடு செய்து அவர்களை

*''ஞாலம் காக்கும் கால முன்பின்*
*தோலா நல்லசை நால்வர்'' (புறம். 56.1-15)*

என்று போற்றுகிறது தமிழ் மரபு.

உலகைக் காக்கின்ற காலத் தத்துவமாகிய வலிமையை உடைய கெடாத நற்புகழை உடைய நால்வர் என்று அவர்களைச் சொல்கிறது புறநானூறு. நால்வரின் சிறப்புகளைச் சொல்கிறபோது, மாற்றுதற்குரிய சீற்றத்தால் கூற்றுவனை ஒத்திருக்கின்றாய் என்று சிவபெருமான் போற்றப்படுகிறார். நினைத்ததை முடிக்கின்ற பெருமையை உடையவன் முருகப்பெருமான் என்று துதிக்கப் படுகிறார். வலிமையில் தன்னொப்பார் இல்லாதவன் பலராமன் என்று திருமால் புகழப்படுகிறார்.

புகழால் தனக்கு நிகர் இல்லாதவன் என்று தன்னை இகழ்வாரை அழிக்கும் பேராற்றல் உடைய மணிவண்ணனை நினைத்து வணங்குகிறார் புறநானூற்றுள். எல்லாரும் புகழ் உடையவர்களே ஆனாலும், புகழுக்கு இலக்கியமாகப் புறநானூறு சொல்வது மணிவண்ணனாகிய திருமாலையேயாகும். எம்பெருமானுடைய திருமேனி அழகை ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமாக

அனுபவித்திருக்கிறார்கள். அவதார சீலத்திலேயே அந்த அழகு நெஞ்சை அள்ளுகிறது என்றால் பரத்துவத்தில் கேட்கவே வேண்டாம்.

பெருமான் இராமாவதாரத்திலே தன்னினிய தம்பியொடும் இன்னினிய பிராட்டியொடும் வனத்திற் செல்லுகிற அழகைச் சொல்ல வார்த்தைகளும் உவமைகளும் தடுமாறி விக்கி நிற்கின்ற அழகைக் கவிச்சக்கரவர்த்தி கம்பரிடம் காணலாம். சக்கரவர்த்தித் திருமகன் திருமேனி அழகைச் சொல்லவிட்டாமல் கவிச்சக்கர வர்த்தியே தடுமாறுகிறார் என்றால் நாம் எம்மாத்திரம்.

*''வெய்யோன் ஒளி தன்மேனியின் விரிசோதியின் மறைவிரியப்*
*பொய்யோ எனும் இடையாளொடும் இளையானொடும் போனான்*
*மையோ மரகதமோ மறிகடலோ மழைமுகிலோ*
*ஐயோ இவன் அழகென்பதோர் அழியா அழகு உடையான் (கம்ப.1926)*

கங்கைப் படலத்தின் முதற்பாடல் நம்நெஞ்சைப் பிழிந்து பெருமானது நீலமேனியில் நிறைகொள்ளச் செய்கிறது. அந்தத் திருமேனியின் நிறத்துக்கு 'மையை' உவமையாக்கலாமா என்று நினைக்கிறார். ஒருவரால் கூட்டிச் செய்யப்படும் மையையா சொல்வது என்ற எண்ணம் வருகிறது. மரகதம் மணியல்லவா? அதைச் சொல்லலாமே ''பச்சை மா மலைபோல் மேனிக்கு'' என்ற எண்ணம் வருகிறது.

இருந்த இடத்தில் பிறிதோர் ஒளியால் பிரகாசிக்கும் மரகதம் தன் ஒளியால் அனைத்தையும் பிரகாசிக்கச் செய்யும் எம்பெருமான் திருமேனிக்கு உவமையாகாது. மணி என்றாலும் அது ஒரு 'கல்' எனப்படும் அல்லவா? பிறரை நெகிழ்வித்து நெகிழும் பெருமான் மேனிக்குக் கல்லைச் சொல்லல் தகாது என்ற எண்ணம் வருகிறது.

அலைகளால் கரைமேல் வந்து மறிகின்ற நீலக்கடலைச் சொல்லலாம் என்று நினைக்கிறார். கரையிலாக் கருணை கடலாக உள்ளவர் பெருமான் கரைக்குள்ளேயே மறியும் கடல் உவமையாகுமா? அன்றியும் அலைகள் வந்த மறியும்போது கடலின் வெண்மை நிறந்தானே காண்போர் கண்ணுக்கு முன்தோன்றும். சிறிதும் வெண்மை கலவாத நீலப் பெருஞ்சோதியல்லவா எம்பெருமான் நிறம் என்ற எண்ணம் வந்தது.

அந்த உவமையும் சரியல்ல என்று நினைத்தபோது, ''மழை மேகம்'' நினைவுக்கு வந்தது. சூல் கொண்ட மேகம் கருநிறம் படைத்தது. எம்பெருமான் கருணையைப்போல் உள்ளும் புறமும் குளிர்ச்சியுடையது. தண்மையும் கருமையும் ஒருசேரப் பெற்ற திருமேனிக்கு 'மழைமுகில்' நல்ல உவமை என்று மகிழ்ந்தார் கம்பர். சற்றே மனத்தில் சலிப்பு உண்டாயிற்று? 'மழைமுகிலோ' என்று அதுவும் பொருத்தமில்லை என்று நினைத்தார் - பெய்த பிறகு வெளுத்து விடும் அல்லவா மழைமுகில். நிலையில்லாத இந்தக் கருநிறத்தை என்றும் நிலைத்த கரிய திருமேனிக்கு எப்படி உவமை சொல்வது? வேறு எங்கே போய் எந்த உவமையைத் தேடிச்சொல்வேன்; ''ஐயோ இவன் அழகு என்பதோர் அழியா அழகு உடையான்'' என்று சொல்லமாட்டாமல் பத்தாயிரம் பாடல்களிலும் தான்பயன்படுத்தாத 'ஐயோ'வைப் பயன்படுத்தித் தன் இயலாமையைக் கம்பர் சொல்கிறார் என்றால் எம்பெருமான் திருமேனி அழகு உவமைக்கு அடங்குமோ?

**(தொடரும்)**

## கூடுவாஞ்சேரியில் ஸ்ரீராம நவமி விழா

திரு மாமரத்து சித்திவினாயகர் ஆலயம், கூடுவாஞ்சேரியில் 19-11-2006 முதல் அனுதினமும் மாலை 6 மணி முதல் 7 மணி வரை ''ஹரே ராம'' நாமசங்கீர்த்தனம் நடைபெற்று வருகிறது. தினமும் ஆஞ்சனேயர் சன்னதி எதிரில் நாமசங்கீர்த்தனம் நடைபெறுகிறது. 14-4-2008 ஸ்ரீராம நவமி அன்று நாம சங்கீர்த்தனத்துடன் சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டது. ஸ்ரீ ராம நவமி அன்று ஸ்ரீராமரும் ஸ்ரீ ஆஞ்சனேயரும் தழுவிக் கொண்டபடி சிறப்பான அலங்காரம் செய்யப்பட்டு மாலையில் ஸ்ரீ ஆஞ்சனேயருக்கு மஹா தீபாராதனை செய்யப்பட்டது. நாம சங்கீர்த்தனம் சுமார் 200 பக்தர்களால் செய்யப்பட்டது. முடிவில் பானகம், நீர் மோர் பிரசாதம் வழங்கப்பட்டது. அத்துடன் ஸ்ரீராமரின் ஜாதகம் நகல் எடுக்கப்பட்டு எல்லா பக்தர்களுக்கும் வழங்கப்பட்டது.

# பிருந்தாவனமும் நந்தகுமாரனும்

*(சென்ற இதழ் தொடர்ச்சி)*

ராதாரமணர், பெரும்பாலும் வ்ரஜத்தின் காடுகளில் (பிருந்தாவனத்தில்) ஏகாந்தமாகச் சென்று தியானம் செய்யலானார். ஒருநாள், வனத்தில் உலாவிக்கொண்டிருந்தபோது, அவர் ஒரு வைஷ்ணவரைக் கண்டார். அந்த வைஷ்ணவர், ஒரு தமால மரத்தின் அடியில், அதன் கிளையை நோக்கி அமர்ந்தபடி, உரக்க ஸ்ரீமத்பாகவதம் பாராயணம் செய்துகொண்டிருந்தார். அவர், தன்னையே கதை கூறுபவராகவும், ஸ்ரீ கிருஷ்ணனையே (யார் அந்த மரத்தில் இருப்பதாக அவர் **பா**வித்தாரோ) கதைக் கேட்பவராகவும் **பா**வித்து பாராயணம் செய்துகொண்டிருந்தார். அவர் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் பெருகியவாறு இருந்தது. இவ்வாறு அவர், ஒவ்வொரு நாளும், ஸ்ரீமத் பாகவத பாராயணம் செய்வார். ராதாரமணர், அந்த சாதுவின் பின்புறம் அமர்ந்து அதைக் கேட்டார். பாராயணம் முடிந்த பின், அவர் மெதுவாக எழுந்து சென்றுவிட்டார். ராதாரமணர் வந்ததோ, பாராயணத்தைக் கேட்டதோ, எதுவும் அந்த சாதுவிற்குத் தெரியாது.

மறுநாள், மறுபடியும் ராதாரமணர் அதே இடத்திற்குச் சென்று அவருடைய பாராயணத்தை அவர் பின்னால் உட்கார்ந்தபடி கேட்டார். இது, பல நாட்களுக்குத் தொடர்ந்தது. ஒரு நாள், அந்த சாது ராதாரமணரைப் பார்த்துவிட்டார். மிகவும் மரியாதையுடன் தன்பக்கத்தில் அமர்ந்தவாரே பாராயணத்தைக் கேட்கச் சொன்னார் அந்த சாது. மேலும், அவர் ராதாரமணரிடம், ''தாங்கள் என்னுடைய இரண்டாவது ச்ரோதா (கதை கேட்பவர்). ஸ்ரீ கிருஷ்ணனே என்னுடைய முதல் ச்ரோதா'' என்றார்.

சாது கூறியதை ராதாரமணர் நம்பியதோடு மட்டுமில்லாமல், ஸ்ரீ கிருஷ்ணரின் அருகில் அமர்ந்தவாரே ஸ்ரீமத் பாகவதம் கேட்கும் தன் பாக்கியத்தை நினைத்து நினைத்து நெகிழ்ந்தார். அந்தப் பாராயணத்தின் இறுதி நாளன்று ஒரு அற்புதம் நிகழ்ந்தது. அந்த தமால வ்ருமரம் பெரும் சப்தத்துடன் வெடித்தது. அங்கு உண்டான பொந்தில் ஒரு நீல ஜோதி தெரிந்தது. அந்த நீல ஜோதியின் நடுவில் மாற்றிவைத்த பாதத்துடன், மயில்பீலி

தரித்துக்கொண்டு, குழல் ஊதியவாரே முரளீதரனாக பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் காட்சியளித்தான். கருணை ததும்பும் விழிகளுடன் மனதைக் கொள்ளைக்கொள்ளும் புன்முறுவலோடு பகவான் தன் இரு பக்தர்களையும் பார்த்தான்.

ராதாரமணர், கிருஷ்ண தரிசனம் பெற்றுவிட்டார்! ஆனால், அந்த ஆனந்தம் தாங்காமல் அவர் மூர்ச்சையாகி கீழே விழுந்துவிட்டார். நினைவு திரும்பியபோது அவர் அந்த சாதுவின் மடியில் இருப்பதை உணர்ந்தார். எழுந்த உடனே அந்த சாதுவை சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தார். அந்த சாது மெதுவாக ராதா ரமணரின் தலையை வருடியவாரே, ''ராதாரமணரே! என்னுடைய ராதாரமணன் உமக்கு இன்று தரிசனம் தந்தருளினான். இனிமேல் நீர் தினமும் ஸ்ரீ கிருஷ்ணனுக்கு ஸ்ரீமத் பாகவதம் படியும்! கிருஷ்ணன் மிகவும் சந்தோஷமடைந்து மேலும் மேலும் உமக்கு அருள் புரிவான்'' என்று கூறினார்.

அன்றுமுதல் ராதாரமணர் ஒவ்வொரு நாளும் ஸ்ரீ கிருஷ்ணருக்கு பாகவதம் படிக்கலானார். ''பாகவதம் படிக்கும்பொழுது ஸ்ரீ கிருஷ்ணனை ஆவாஹனம் செய்யவேண்டிய அவசியம் இல்லை, ஏனெனில், பகவான் ஸ்ரீ கிருஷ்ணனுக்கு பாகவதம் கேட்க மிகவும் விருப்பம். அதனால், அழைக்காமலேயே அவன் பாகவதம் படிக்கும் இடத்திற்கு ஓடி வந்துவிடுகிறான்''. என்று அந்த சாது ராதாரமணரிடம் கூறியிருந்தார்.

ஸ்ரீ கிருஷ்ணன் மட்டுமே தனது ச்ரோதா என்று **பா**வத்துடன் அவர் தினமும் பாகவதம் படித்தார். பாகவத ச்லோகங்களைப் படிப்பது மட்டுமல்லாமல் அதன் அர்த்தங்களையும் விளக்குவார் ராதாரமணர். இந்த உபந்யாசங்கள் மிகவும் அற்புதமாக இருந்தன. அதனால், அவருடைய பாகவத பாராயண-பிரவசனத்திற்கு பெரும் கூட்டம் கூடலாயிற்று. பாகவதம் உரையாற்றுவதில் மிகவும் பெயரும் புகழும் பெற்றார் ராதாரமணர். பண்டிதர்கள் அனைவரும் கூடி அவருக்கு ''பாகவத பூஷண்'' என்ற பட்டத்தையளித்தனர்.

ஸ்ரீமத் பாகவதத்தின் பாராயணத்தினால் மட்டுமே ஸ்ரீ கிருஷ்ணன் எவ்வளவு ப்ரீதியடைகின்றான் என்பதையும், அதனால் மட்டுமே ஸ்ரீ கிருஷ்ணதரிசனம் எவ்வளவு எளிது என்றும் இந்த சரித்திரம் நமக்கு விளக்குகின்றது.

**(தொடரும்)**

# அக்ஷரமணமாலை

***(ஸ்ரீ ஸ்வாமிஜியின் உரைகளிலிருந்து -146)***

*நொந்திடாது உந்தனை தந்தெனை கொண்டிலை*
*அந்தகன் நீ எனக்கு அருணாசலா*

பலர், பலவிதமான கேளிக்கை விஷயங்களான சினிமா, நாடகம், விளையாட்டு, பூங்கா, கடற்கரை போன்ற இடங்களில் நேரத்தையும் காலத்தையும் செலவழிக்கிறார்கள். அவர்களைப் பார்த்தால் கவலையோடு இருப்பதுபோல் தெரியவில்லை. அவர்களில் பலர் காதுகளில், ஆன்மா என்றோ, பகவான் என்றோ விழுந்திருக்கவும் இருக்காது. ஆயினும், ஆன்மாவை பார்க்க வேண்டும் என்ற எண்ணத்தினுடன் சாதனை செய்வோரைப் பார்த்தால் கவலையோடு இருப்பது போலிருக்கிறது. காரணம், முழு நேரமாய் சாதனை செய்ய வீடு, வேலை, குடும்பம் போன்றவற்றை விட்டு வந்தாலும் பெரிய முன்னேற்றம் கண்டபாடில்லை. ஆன்மீகத்தில் நாட்டம் கொண்டு வந்த பிறகு, பிற விஷயங்கள் சாரமற்றதாக தோன்றிவிடும். ஏனையோரைப் போல் வாழவும் முடியாது. சாதனையைச் செய்யவும் முடியாது போனால் வாழ்க்கை வீண்.

பகவான் ஸ்ரீ ரமண மகரிஷிகளின் வாழ்க்கையைப் பார்த்தால், அவர் பள்ளியில் படித்து வருகையிலே திடுமென ஆன்ம நாட்டத்தினால் திருவண்ணாமலை கிளம்பி வந்துவிட்டார். ''உன்னைத் தேடி வந்த என்னை ஆன்மசாக்ஷாத்காரம் பெறுமாறு அருளவில்லை எனில், (நான் பழையபடியே பள்ளியில் படித்துக் கொண்டு இருந்திருப்பேனே! எனும் பொருள்படும்படி) அருணாசலா! நீ எனக்கு அந்தகனாவாய்'' என்று ரமணர் சொல்வது போல் இப்பாடல் அமைந்துள்ளது.

இந்தப் பாடல், ஸ்ரீமத் பாகவதத்தில் சிறு குழந்தையான துருவன் நாரத மகரிஷியைப் பார்த்துப் பேசும் வார்த்தைகளுக்கு ஒப்பாக இருக்கிறது. உத்தான மகாராஜாவின் முதல் மனைவி சுநீதி; இரண்டாவது மனைவி சுருசி. முதல் மனைவியின் குழந்தை துருவன். அவன் அரசவையில் தன் தந்தையின் மடியில் சென்று

அமர முயற்சிக்கையிலே, அருகில் அமர்ந்திருக்கும் இரண்டாவது மனைவியான சுருசி துருவனைக் கீழே தள்ளிவிட்டு, ''தந்தையின் மடியில் அமர வேண்டும் என்றால், வரம் பெற்று, எனது வயிற்றில் மறுபடி வந்து பிறப்பாய்'' எனக் கூறினாள். இதை துருவன் தனது தாயிடம் சொல்லி அழ, அவள் துருவனை சமாதானப்படுத்தி, ''எல்லோருக்கும் தந்தை நாராயணன்தான். நீ மதுவனம் சென்று, அவனைத் தியானித்து, அவனருள் பெறுவாய்'' எனக் கூறி அனுப்புகிறாள். இதை அறிந்த நாரத மகரிஷி, துருவனை நேரில் சந்திக்க வருகிறார். தெய்வத்தை தேடிச் சென்றால், குரு தானாகவே வருவார் என்பதைத்தான் இது காட்டுகிறது.

நாரத மகரிஷியை துருவன் முறைப்படி வணங்கி, தனக்கு நாராயணன் தெரிவான் என அருள்புரியுங்கள் என வேண்டுகிறான். நாரதரோ துருவனிடம், ''துருவா, மதுவனத்தில் காட்டு விலங்குகள் அதிகம். நீயோ சிறுவன். கலக்கமாயிருக்கிறது'' என்கிறார். மேலும், ''துருவா, பல முனிவர்கள், கடுந்தவத்தை பல ஆண்டுகளாக செய்தும், நாராயணனை கண்டார்களில்லை. நீ ஏன் நேரத்தை வீணடிக்கிறாய்'' என்கிறார். துருவனை சோதித்துப் பார்க்கிறார் நாரதர். துருவனோ சிறிதும் கலங்கவில்லை. நாரதரே வெட்கப்படுமளவிற்கு பின்வருமாறு ஒரு கேள்வியை கேட்கிறான்.

''மகரிஷியே, தாங்கள் உபன்யாசத்தில், பகவான் சுலபன். அனைவராலும் பார்க்கமுடியும் என்கிறீர்கள். பகவான் கருணையே உருவானவன். கண்டிப்பாக அருளுவான் என்கிறீர்கள். ஒருவர் உங்களைத் தேடி வந்து எனக்கு பகவானை காட்டுங்கள் என்றால், அவரை ஊக்குவிப்பதை விட்டுவிட்டு, அவர் முயற்சியே வீண் என்று பேசுகிறீர்களே, இது உங்களுக்குச் சரியாகப்படுகிறதா?'' என்றான் துருவன். துருவன் இப்படிப் பேசினாலும், மனதில் அவனை மிகவும் பாராட்டும் நாரதர், துருவனை ஆசீர்வதித்து அனுப்புகிறார்.

நாரதர் அருள் பெற்ற துருவன் மிகக் கடுமையான தவத்தை, மிகவும் அனாயசமாக செய்து, நாராயணனின் திவ்யதரிசனம் பெற்று திரும்பினான் என்கிறது ஸ்ரீமத் பாகவதம்.

குருவினருளோ தெய்வத்தினருளோ கிட்டாவிடில், ஆன்ம முன்னேற்றம் என்பது வெறும் பேச்சாகிவிடும் என்பதை இப்பாடல் தெளிவாக உணர்த்துகிறது.

(தொடரும்)

## ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் நிகழ்ச்சி நிரல்

| தேதி/நேரம் | நிகழ்ச்சி நிரல் |
|---|---|
| 15-06-2008 முதல்<br>21-06-2008 வரை | உதயாஸ்தமன ஸ்ரீமத் பாகவத சப்தாஹம்<br>இடம் : அயோத்யா அஸ்வமேத<br>மஹா மண்டபம், மேற்கு மாம்பலம்,<br>சென்னை-33.<br>தொடர்புக்கு : 09282145174 |
| 22-06-2008 | மஹாமந்திர கூட்டுப் பிரார்த்தனை,<br>இடம் : கெங்குவார்பட்டி<br>தொடர்புக்கு : 09994280631 |
| 28-06-2008<br>29-06-2008 | ராதா கல்யாணம்<br>சென்னை |
| 01-07-2008 முதல்<br>17-08-2008 வரை | ''யோகிராம் சுரத்குமார்...''<br>அகண்டநாம கீர்த்தனம்<br>இடம் : யோகிராம் சுரத்குமார்<br>ஆசிரமம், திருவண்ணாமலை |
| 16-6-2008<br>29-06-2008 | ஏகாதசி |

ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை
Personal Secretary to
**HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**
New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83
Telephone : 044-24895875, email ID : contact@madhuramurali.org
என்னும் முகவரிக்கு அனுப்பவும்.

மதுரமுரளி - பாரதத்தின் அனைத்து பிரதான மொழிகளிலும் வெளிவர இருக்கின்றது. தெலுங்கில் முதல் பிரதி வெளியாகியுள்ளது.
தொடர்புக்கு :
Smt. Sri Latha Ravichandran, 040 - 2339 2758

**மங்களானிபவந்து**